www.padippakam.com

Front de libération populaire (J.V.P.)
du SRI-LANKA
Comité en France
39, rue Richard Lenoir
75011 PARIS
Tél. 40 33 47 73 - Fax 40 33 04 14

# செஞ்சக்தி

1996 நவம்பர்

அணி- 1 படை- 5

நன்கொடை 6 ரூபா

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ மத்திய ஏடு

# ரோஹண விஜேவீர நாமம் என்றென்றும் அழியாது அமரத்துவம் மிக்கது

**"மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் தோழர் ரோஹண விஜேவீர, நான் ஆரம்பித்த காரியத்தை வெற்றிகரமாக முடித்த ஓர் முன்னணி புரட்சிவீரர்; உழைக்கும் வர்க்கத்திற்காகவே ஓர் கட்சியை உருவாக்கியவர்; நமக்குள்ள பணி அந்த கட்சியை முன்னெடுத்துச் சென்று ஆட்சியதிகாரத்தை கையேற்கும் வரை வெற்றிகரமாக நடத்திச்செல்வதேயாகும். இன்று இங்கு திரண்டிருக்கும் மாபெரும் மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்போது அந்த நினைப்பு நிறைவேறும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பது நிரூபணமாகிறது."இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி பொதுச்செயலாளர் தோழர் டில்வின் சில்வா கடந்த மாதம் 13ம் திகதி மஹரகம இளைஞர் அரங்கில் நடைபெற்ற கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த கலாச்சார விழாவில் சிறப்புரையாற்றும்போது கூறினார். மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது**

"விஜேவீர என்ற நாமத்தை ழித்தொழிக்கமுடியாது. அது ன்றென்று ம் தோல்வியைத் ழ்வாது. என்றென்றும் நீடூழி ாழும்." என்று பாதுச்செயலாளர் தோழர் ல்வின்சில்வா கூறியபோது, டியிருந்த மக்களின் ஆரவாரமும் கோஷமும் மண்டபத்தையே திரவைத்தது.

ஒருமனிதனைக் கொன் ாழிக்க முடியும் ஆயினும் பனைத் தோற்டிக்கமுடியாது ர் று சொலவதை நாம் ட்டிருக்கிறோம். அந்தக் கூற்று தாரண மனிதனின் ணத்தையிட்டுக் கூறிய வெறும் ர்த்தையல்ல. எனினும் தன் ழ்நாள் முழுவதையும் சமூக ர்னேற ்றத்திற்காக, தனது வாழ்வையும் அந்த வாழக்கையிலிருந்த அனைத்து தகுதிகளையும் மனிதகுல மேம்பாட்டுக்காக அர்ப்பணித்த மனிதர்களுக்கென்றால் இந்தக் கூற்று வரையறையற்ற உண்மையாகும்.

1996 நவம்பர் 13ம் திகதி நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் மஹரகமை இளைஞர் அரங்கிற்கு திரண்டுவந்த மக்கள் கூட்டம் இதை நிரூபிப்பதாக இருந்தது. மரணத்தால் தோற கடிக்கமுடியாத ஒரு மாபெரும் மனிதரின் உருவச்சிலைக்கு முன்னாலும் அதேபோல் ஆயிரக் கணக்கான வீரர் வீராங்கனைகளின் உயர்ந்த பட்சகுணாம்சங்களை நினைவுகூறும் முகமாகவும் அவர்களின் பாதச்சுவடடில் பலபடிமுன்னேறுவதற்கும் நவம்பர் 13ம் திகதி மஹரகமை இளைஞர் அரங்கிற்கு அணி திரண்டனர். மக்கள் விடுதலை முன்னணி ஸ்தாபகர் பேரன்புமிக்க ரோஹண விஜேவீராவின் உயிரைப் பறிப்பதற்கும் அந்த அநியாய மிக்க கொடூரச்செயலுக்கு பல வழிகளிலும் ஒத்தாசை வழங்கிய படுபாவிகளின் நெஞ்சை உலுக்கிய, அந்த வேதனை மிக்க 13ம் திகதி எம் மத்தியில் மீண்டும் உயிாத்துடிப்புடன் இருக்கிறது.





கார்த்திகை வீரரகளை நினைவு கூற திரண்ட மக்கள் திரள்....

மக்களிடமிருந்துபறிக்கப்பட்ட அந்த மாமனிதர் உட்பட அதேபோன்ற ஆயிரக்கணக்கான மாமனிதர்களின் வாழ்க்கையின் வாசனையைப் புரிந்துகொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் மஹரகமை அரங்கில் நிறைந்து வழிந்தனர். அனைவருக்கும் அஞ்சலி செலுத்தக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்த நினைச் சின்னத்திற்கு அருகில் முதியோர், இளையோர், குழந்தைகள் சகல ததரப்பிலுமுள்ள மக்கள், தாங்கள்

5 ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



## அரசியல் கண்ணோட்டம்

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கத்தின் மற்றுமோர் வரவு செலவுத்திட்டம் கடந்த சில நாட்களுக்கு முன் முடிவுற்றது. கடந்த முறை நடந்து முடிந்த வரவு செலவைப் போலவே, பல அலங்கார மாயாஜால வித்தைகள் காண்பிப்பதற்கு தயார்செய்யப்பட்டது போலவே கடந்த முறையை விட இம்முறை காண்பித்த மாயாஜாலவித்தை கையிலேயே பட்டு எரியக்கூடிய ஒன்று. கடந்த முறையைவிட இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் .துண்டுவிழும் தொகை அதிகரித்தே காணப்படுகின்றது. எனவே இந்த வரவுசெலவு, அரச ஊழியர்களின் ●ம்பளத்தை உயர்த்துவதாக 'மாஜிக்' உறுதிமொழிவழங்கும் வரவு செலவுத்திட்டம். அதேவேளை மேலதிக வேலை நேரத்திற்காக வழங்கிய சலுகைகளை நிறுத்தும் நிபந்தனையையும் அதனோடு எரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் இந்திரஜாலம் கையில்பற்றி எரிவதை யாராலும் தடுக்கமுடியாது.

இவ்வாறான பல இந்திர ஜாலங்களினால் நிறைந்திருக்கும் இம்முறை வரவுசெலவுத்திட்டம், பொதுவாக நோக்குமிடத்து சமூகத்தில் கீழ் மத்தியத்தர வர்க்கத்தினருக்கும் ஒடுக்கப்பட்ட சமூகசகதிகளுக்கும் பொதுவாக பாட்டாளி வர்க்கத்திற்கும் பாரதூரமானமுறையில் பாதிக்கும் மிக மோசமான வரவுசெலவு திட்டமேயாகும். அப்படியெனில் அந்த சமூகவர்க்கத்தில் ஓரளவு அடித்தளம் உள்ளவர்களின் , அடித்தளமும் ஆட்டம் காண்பதற்கும், கீழ் மட்டத்தை நோக்கி விழவும் இம்முறை வரவுசெலவுத்திட்டம் உதவியுள்ளது. அரசாங்கம் எவ்வாறான இந்திரஜாலங்களைக்காட்ட முற்பட்டாலும் கூட இம்முறையின் வரவுசெலவின் பாதிப்பும் இம்முறை அந்த கருத்தினுள் மறைந்திருக்கும் பிரதான விடயம் என்னவெனில் மூன்றாம் தரப்பினரை பேச்சுவார்த்தைக்காக அழைக்க வேண்டுமென்ற கருத்து மேலோங்குவதேயாகும்.

இங்கே மூன்றாந்தரப்பினர் என்பது எக்காரணத்தினாலும் பிரிவினைவாத கொள்கைக்கு எதிரானவர்களாக இருக்கக்கூடாது. பெரும்பாலும் அந்த மூன்றாம் தரப்பினர் அமெரிக்கசார்பு கைக்கூலியாக இருக்கப்போவதே முற்றிலும் உண்மை. அவ்வாறான தரப்பினரின் தலையீட்டால் தேசியப் பிரச்சினை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கி அழிவைநோக்கி செல்லும் சந்தர்ப்பமே இன்றைய அரசியல்போக்கில் காணக்கூடியதாய் இருக்கிறது.

மூன்றாம் தரப்பினரின் ஒத்துழைப்போடு மீண்டும் L.T.T.E யுடன் பேச்சு வாாத்தையை ஆரம்பிக்கும்படி இருபத்து மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களால் கைச்சாத்திடப்பட்ட யோசனைமூலம், அரசாங்கத்தை கேட்டதாக பத்திரிகைகளின் செய்தி வெளி வந்ததோடு, இதைப்பற்றிய பேச்சு மிகவும் காரசாரமாக இருந்தது. பாராளுமன்ற உறுப்பினர் தோழர் நிஹால் கலப்பதியும் அந்த யோசனைக்கு கையெழுத்திட்டுள்ளார் என்று பத்திரிகை செய்தி வெளிவந்திருந்ததோடு இவ்விவகாரம் மிகவும் தீவிரப்பட்டிருந்தது. ஆயினும் குறிப்பிட்ட முழு செய்தியையும் தோழர் நிஹால் கலப்பதி முற்றாக நிராகரித்ததன் மூலம் மூன்றாம் தரப்பினர் என்ற லேபலோடு, 'யங்கி' தரப்பினரை பிரச்சினைக்கு உட்படுத்திக்கொள்ளும் முயற்சி தடுக்கப்பட்டது.

# வரவு செலவு

சுமையும் என்னவென்று மக்கள் வரவுசெலவுக்குமுன்பே நன்றாக தெரிந்துவைத்திருந்தனர். வரவு செலவின் துண்டுவிழும் தொகையை நிரப்பி சீர்செய்வதற்காக இம்முறை அரசாங்கத்திற்கு அரசு ஸ்தாபனங்களை விற்பதை நடை முறைப்படுத்துவதைவிட அரசாங்கத்திற்கு வேறுவழி கிடையாது. மிக மோசமான, பலஹீனமான நிர்வாகத்தின் கீழ் பாரிய அளவில் பெரும் லாபத்தை ஈட்டிய 'உருக்கு' கூட்டுத்தாபனத்தை வரவுசெலவின் சூடு தணிவதற்கு முன்னே குறைந்த விலைக்கு விற்கப்பட்டது.

பொருளாதாரத்துறையின் இந்த அபாயகரமான நிலைமை வளாச்சி அடைந்து கொண்டிருக்கும் அதேவேளை அரசியல் துறையிலும் அதற்கு சமமான அளவில், மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் போக்கும் வளாச்சியுற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த வாரம் அரசியல்துறையில் பெரும் கவனத்தை ஈர்த்தது இந்த போக்கேயாகும். அவைகளில் இலங்கையில் முதலிடம் வகிக்கும் பிரச்சினை தேசிய பிரச்சினை என்ற காரணியாகும்.

''சமாதான பேச்சுவாாத்தை'' மூலமாக பிரிவினைவாதக்கொள்கையின் நடவடிக்கைப் பற்றிய இணக்கத்திற்கு வரமுடியாமல் போனபிறகு, அதற்காகவே ஆரம்பிக்கப்பட்ட பிரிவினைவாதிகளின் யுத்தமும் தற்போது சரிவுற்ற நிலையிலேயே உள்ளது. எனவே மீண்டும் பிரிவினைவாதத்தை வெற்றிப்பெற செய்வது எப்படி நடக்கவேண்டும் என்ற கேள்வியை தெளிவுபடுத்திக் கொள்வற்காக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கமும், அரசாங்கத்திற்கு சார்பானவர்களும் கருதுகின்றனர். குறிப்பாக எவ்வாறாயினும், இலங்கையில் தேசிய பிரச்சினையில் மோதும் இருசாராரான (L.T.T.E- அரசாங்கம்) இவர்கள் பிரிவினைவாதத்திற்கு எதிரானவர்கள் அல்ல. இவர்கள் இருவருக்குமிடையே இருக்கும் பிரச்சினை பிரிவினைவாதத்தை நடைமுறைப்படுத்தும் சிக்கல் மாத்திரமேயாகும். ஆகவே ஒரே தடவையில் ஈழத்தை உருவாக்கும் பிரிவினை வாதக்கொள்கையை வெற்றியடையச்செய்வதா? அல்லது படிப்படியாக ஈழத்தை உருவாக்குவாக்கும் பிரிவினை வாதக் கொள்கையை வெற்றிபெறச் செய்வதா என்ற பிரசசினை மாத்திரமே இந்த இருசாராருக்கும் உள்ள முக்கிய பிரச்சினையாகும். எனவே இந்த இருசாராருக்கும் இருக்கும் பிரச் சினையைத் தீர்ப்பதற்காக தலையிடும் எவரும் இந்த இருசாராரையும் சந்தோஷப் படுத்தும் தீர்வொன்றை ஏற்படுத்துவது என்பதே, அது உண்மையாகவே பிரிவினை வாதக்கொள்கை வெற்றிபெறச்செய்யும் என்பதேயாகும். குறிப்பிட்ட தலையீட்டால் மேலும் உற்சாகமடைவது அரசாங்கமென்றால்...., அதிலிருந்து வெளிப் படுவது என்னவெனில் ஈழத்தைப் படிப்படியாக உருவாக்கும் அரசாங்கத்தின் கொள்கை வெற்றியளித்துள்ளது என்பதேயாகும். அல்லது மிகவும் சந்தோஷமடைவது L.T.T.E என்றால் அதிலிருந்து தெரிவது ஒரே முறையில் ஈழத்தை உருவாக்கும் அவர்களது கொள்கை வெற்றியளித்துள்ளது என்பதாகும். இந்த இருசாராரில் எவர் சந்தோஷமடைய வேண்டும் என்று மூன்றாம தரப்பினரின் ஒரிணக்கத்திற்கு இந்த இருசாராரையும் கொண்டு வந்தாலும் கூட, அதில் இலங்கை மக்களை கடுகளவேனும் சந்தோஷப்படுத்தும் என்று குறைந்த பட்சமாவது எதிர்பார்க்கக்

# இடர்ப்பாடுகளும்

கூடியதல்ல. இபபுதிய ஒத்துழைப்பின் மூலம் தற்போது நிலவும் தேசியப் பிரச்சினை பல முனைகளிலும் அபிவிருத்திடைந்து, சீரழிவதைப் பார்க்கும்போது சாதாரண சமூகத்தில் எவருமே ஆனந்தமடைவதற்கு வாய்ப்பில்லை. இந்த மூன்றாம் தரப்பினரின் ஒத்துழைப்போடு ஆரம்பிக்கப்படும் பேச்சுவார்த்தை அடுத்த வருடம் முற்பகுதியில் தொடங்கப் படுவதற்கான வாய்ப்புள்ளது. குறிப்பாக அரசாங்கத்தின் உத்தேச அதிகாரப் பரவலாக்கல்(package) யோசனையை ஏப்ரல் மாதத்திற்கு முன்பு ஓர் உறுதியான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருப்பதால், இந்த பிரிவினை வாத பேச்சுவாாத்தையும் ஆரம்பிக்கப்படுவது அதே காலப்பகுதியில் அல்லது அதற்கு முன்பு......

தேசிய பிரச்சினை மென்மேலும் சிக்கலானதாக மாற்றும் இந்த சிறுசிறு போக்கும் அதேமுறையில் வளர்ந்துகொண்டிருக்கும் வேளையில், அரசாங்கத்தினுள் அரசியல் ஒற்றுமை உடைந்து விழும் நிலைக்கு



கம்பெனியை விற்கும் போது செய்த கொண்ட ஒப்பந்தம். ஷெல் கம்பெனியும் தான்தோன்றித்தனமாக கேஸ்ஸின் விலையை அதிகரிக்கும் ஒப்பந்தம் என்பதால், பொதுவாக தனியார்மயச் கொள்ளை என்ற அரசாங்கத்தின் கொள்கையும் அவ்வாறே அக்கொள் கையை நடைமுறைப்படுத்தும் அரசாங கத்தின் கபடத்தனம் அனைத்தும் மக்கள் மத்தியில் அம்பலமாவதால் மேல்கண்ட பிரச்சினை அதிகரித்துள்ளது.

உருக்கு கூட்டுத்தாபனத்தை மிகவும் குறைந்த விலைக்கு கொரிய கம்பெனிக்கு விற்பதற்கு அரசாங்கம் எடுத்தமுடிவும் தற்போது பாரிய நெருக்கடிக்கு இட்டுச்சென்றுள்ளது. காரணம் யாதெனில் அரசாங்கத்தின் லஞ்சப் வாங்காத, தொழிற்சங்க கைக்கூலிகள் அல்லாத, உழைக்கும் பெருந்தொழிலாளர் படையொன்று உருக்குக் கூட்டுத்தாபனத்தை விற்பதற்கு எதிராக அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருநத்தால், அதே வேளை உருக்கு கூட்டுத்தாபனத்தை விற்பதற்கு எதிராக நாடுமுழுவதும் எதிர்ப்பு உருவாகியிருப்பதால் அரசாங்கத்தில் பெரும் பாதிப்பான பலனையே தந்துள்ளது.

இவ்வாறாக கடந்த சில வாரங்கள் கடந்து சென்றாலும், எதிர்வரும் காலங்களில் பொதுவாக முதலாளித்துவமுறையும் குறிப்பாக அந்த நலிவடைந்த முதலாளித்துவமுறையைப் பாதுகாக்கும், தோல்விமிக்க முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கமும் அதை மேலும் நெருக்கடிக்குள் செல்வதைக் கட்டுப்படுத்தமுடியாமல் போகும்நிலை தீர்க்கமாகவே உள்ளது. அந்த நெருக்கடியிலிருந்து விடுபட அரசாங்கம் முயற்சிக்கும் என் நினைத்தாலும் இறுதியாக அந்த முயற்சியும் பாதாள நெருக்கடிக்குள் மென்மேலும் விழும் என்பதேயாகும். எனவே நெருக்கடிக

# இருமுனைத்தாக்கமும்

முகம்கொடுப்பதற்கு தற்போது மீண்டும் தோன்றியுள்ளது. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி( லலித் பிரிவு) தனது தனித்துவத் தன்மையை பாதுகாப்பதற்காக தனியாக பிரச்சாரம் செய்தலும் இளைஞர் மாநாட்டைக் கூட்டுவதிலும் இருந்து தெரிவது என்னவெனில் அரசாங்கத்தின் உள்ளேயே ஐக்கியம் பேராபத்திலிருக்கிறது என்பது தெளிவாகிறது. அஷ்ரப் அமைச்சரோடு ஏற்பட்ட நெருக்கடிக்கு தற்காலிகமாக தீர்வுகண்டிருந்தாலும் கூட, அவ்வாறான நெருக்கடி மீண்டும் ஏற்படாது என்று எவருக்கும் உத்தரவாதமளிக்கமுடியாது.

இதேவேளை 'ஷெல்' கேஸ் கம்பெனியுடன் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தம் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு குறைபாடு உள்ளதென்று மக்களுக்கு அம்பலமான பிறகு அரசாங்கத்தின் பொருளாதார நிலை சுக்கானை ஓட்டுவோரும் பாரிய நெருக்கடிக்குள்ளாகியிருந்தனர். அரசாங்கத்தினாலேயே நியமிக்கப்பட்ட இலங்கை முதலீட்டாளர்சபையைக் கலைத்தெறியவும் அதற்கு புதிய அங்கத்தவர்களை நியமிக்கவும், மீண்டும் புனரமைப்பு செய்யவேண்டிய நிலைஏற்பட்டுள்ளது. முக்கியமாக ஷெல் கம்பெனிக்கு கேஸ

குள்ளாகும் முதலாளித்துவ அரசாங்கத்திற்கு தீர்வும் மென்மேலும் நெருக்கடியில் மூழ்குவதேயாகும்.

6ம் பக்கத்திலிருந்து

### ஷெல் கேஸ் ...

தடைகளையும் தற்போது சட்ட வரையறைக்குள்ளேயிருந்தே முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

இலங்கை கேஸ் பாவனை யாளர்களை திருப்தி படுத்தும் அரசாங்கத்தின் முடியாமைக்கு விடையாக வரவழைக கப்பட்ட உலகில் மாபெரும் வியாபாரிகளான ஷெல் கம்பனி 'தமது லாபத்தை மறந்து சேவை செய்வதை எதிர்ப்பாக்கமுடிவது '[illegible]' நிறுவனத்தின் தரகர்மார்களுக்கும் சந்திரிகா அரசாங்கத்தின் ஜீ. எல். பீரிஸ் போன்றவர்களுக்கு மாத்திரமே என்று கருதவேண் டியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



(சென்ற இதழின் தொடர்ச்சி)



இப்படித்தான் நடந்து கொண்டன. தாம் தொடர்ந்து பதவியிலிருப்பதற்காக, ஏதாவது ஒரு இனவாதத்தோடு சோரம் போவது, அல்லது எல்லா இனவாதத்தோடும் சோரம் போவது முன்னைய அரசாங்கங்களின் வழக்கமாக இருந்தது.

**நியமுவா: இந்தப் பேச்சுவார்த்தையின போது நீங்கள் கூறினீர்கள் பாட்டாளிவர்க்கத்தை ஒற்றுமைபடுத்தும் நோக்கில் பிரிவினைவாதத்தை எதிர்ப்பதாக. ஆனால் தமிழ் மக்கள் பிரிவினைவாத அரசியலுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். அவர்களைச் சோஷலிஸ**

என்ற கேள்வியே தவறு. சமூகங்களைக் கோடு கீறி பிரிக்காமல், இலங்கை மக்கள் அனைவரையுமே சமுதாயப்புரட்சிக்காக சேர்த்துக் கொள்வது எப்படி என்றே நாம் சிந்திக்க வேண்டும். அதற்காக பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தை நிலை நாட்ட வேண்டும். சிங்கள, தமிழ், ஆங்கிலம் பேசக்கூடிய மக்களிடத்தில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதேபோல், மக்களை சமூகப் புரட்சிக்கு இட்டுச் செல்ல தடையாக உள்ள அனைத்து தடைகளையும் தோற்கடிக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்தில், முக்கியமாக பிரிவினைவாதத்தை தோற்கடிக்க வேண்டும். எல்லா மொழிகளைக் கொண்டும் அரசியல் நடவடிக்கைகளை நாம் மேற் கொள்ளும் போது, ஒவ்வொரு சமூகத்தையும் புரட்சிக்கு இழுத்துக் கொள்வது சம்பந்தமான உங்கள் கேள்வி செல்லுபடியாகாது.

# இனவாத பொறியில்

சிங்கள இனவாதிகள் தமிழர்களைக் கொன்று விரட்டும் போது, தமிழ் இனவாதிகள் சிங்கள, முஸ்லிம் கிராமங்களைத் தாக்கி நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்றனர்.

இப்போதும் கூட மிகப் பாரதூரமான முறையில் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. சிங்கள இனவாதத்துக்கு எதிராக தமிழ் இனவாதத்துக்குள் விழுவதும், தமிழ் இனவாதத்துக்கு எதிராக சிங்கள இனவாதத்துக்குள் விழுவதும் தீர்வாக அமையாது. அதனால் பிரச்சினை அதிகரிக்குமே தவிர, குறையப் போவதில்லை. செய்யவேண்டியது என்னவென்றால், எல்லா இனவாதத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு பாட்டாளி வர்க்கத்தின் பரந்த ஒற்றுமைக்காக செயல்பட வேண்டும். பிரிவினை வாதம் இருக்கும் வரையும் நிலைமை மோசமாகவே இருக்குமென்பதால், அதனைத் தோற்கடிக்க வேண்டுமென்றே நாம் சொல்கிறோம்.

**நியமுவா:- பிரிவினைவாதத்தை எதிர்ப்பதும்; பாட்டாளி வர்க்கத்தின் பரந்த ஒற்றுமைக்காக தோன்றுவதும் இரண்டினதும் நடைமுறையை சற்று விளக்கமாகக் கூறுங்கள்.**

**தோழர் அமர சிங்க:-** இச்சந்தர்ப்பத்தில், இந்த இருசாரரரினதும் அரசியல் இனவாதத்திலேயே தங்கியுள்ளது. ஒரு பக்கத்தில் தமிழ் இனவாதம், ஏகாதிபத்திய தூண்டுகின்றனர். இன்று வடக்கின் இனவாதம் தனி ராஜ்ஜியம் கேட்குமளவுக்குத் தள்ளப்பட்டதற்கும், சாதாரண தமிழ் மக்கள் தனி நாடொன்றுக்காகத் தூண்டப்பட்டதற்கும்; சிங்கள இனவாதமும்; கடந்த காலங்களில் அவர்கள் நடந்து கொண்ட முறையுமே காரணமாக இருந்தன. ஆகவே, சிங்கள இனவாதத்தினால், தமிழ் இனவாதத்தை ஒருபோதும் தோற்கடிக்க முடியாது. தமிழ் இனவாதத்தைப் பலப்படுத்துவதற்கும், மக்களுக்கிடையில் சந்தேகங்களை வளர்ப்பதற்கும், எதிர்மனப்பான்மையை அதிகரிப்பதற்கும் மாத்திரமே அவர்களால் செய்ய முடியும். எனவே இந்த நாட்டு மக்கள் இனவாத வலையில் சிக்கக் கூடாது என்றே நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

**நியமுவா: இந்த இரண்டு இனவாதப் பிரிவுகளுக்கிடையில் முதலாளித்துவ அரசாங்கத்தின் தலையீட்டை நீங்கள் எப்படி காண்கிறீர்கள்?**

எமது நாட்டில், அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இனவாதத்தைப் பயன்படுத்தினர். அதனால் தான் பண்டாரநாயக சிங்கள இனவாதியாக மாறினார். அதேபோல் சந்திரிகாவும் தனது அதிகாரத்தையும் உயிரையும் பாதுகாத்துக் கொள்வதற்காக தமிழ் இனவாதத்துக்கு சார்பாக உள்ளார். இப்போதும் கூட, பாராளுமன்றத்திலுள்ள தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களின் வாக்குப் பலத்திலேயே சந்திரிகாவின் அரசாங்கம் தங்கியுள்ளது. எனவே, அதிகாரத்தைப் பாதுகாத்து கொள்வதற்காகவும், உயிரைப்

வேலைத்திட்டத்துக்குள் சேர்த்துக் கொள்வது, இந்த நிலைமையில் எவ்வாறு முடியும்?

**தோழர் அமரசிங்க:** தமிழ் மக்கள் அனைவருமே பிரிவினை வாதத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்களென்று நாம் நம்பவில்லை. பிரபாகரனின் பலவந்தத்தினால் பெரும்பான்மையோர் பிரிவினைவாதத்தை ஆதரித்தாலும், எல்லோருமே அந்த நிலையில் இல்லை. அரசாங்கத்தின் செயல்பாட்டினால் அவர்களும் பிரிவினைவாதத்துக்குள் தள்ளப்படடுக் கொண்டிருக்கிறார்கள். எப்படியிருப்பினும், 1977ல் அமிர்தலிங்கம் தமிழ் ஈழத்துக்காக வாக்கு கேட்ட போது தமிழ் மக்கள் எல்லோருமே அவர்களுக்கு வாக்களிக்கவில்லையென்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் பிரிவினை வாதத்தோடு எவ்வளவு தூரம் தொடர்பு வைத்துள்ளார்கள் என்பதைப் பார்க்க

**நியமுவா: தமிழ் மக்களை பாட்டாளி வர்க்கப் போராட்டத்துக்கு சேர்த்துக் கொள்ளும் போது, அவர்களின் பிரிவினைப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். மேற்பார்வைக்கு அதில் ஒரு தர்க்கரீதியான சுபாவம் இருக்கிறது. இது சம்பந்தமாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**தோழர் அமரசிங்க:** அது முற்றிலும் தவறான ஒரு யோசனை. பிரிவினை வாதப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதால் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் கரைந்து விடும். இனவாதமும், பாட்டாளி வர்க்க சர்வதேசமும்; எப்போதுமே ஒன்றுக்கொன்று ஒத்துப் போகக் கூடியதல்ல. எனவே, எவ்வகையான தர்க்கரீதியினாலும் ''பிரிவினை வாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்க பாட்டாளி வர்க்கத்தால் முடியாது



# சிக்காமல் இருப்பதென்றால்

வலையில் சிக்கியுள்ள அது ஆயுதபானியான ஒரு அமைப்பும், சந்திரிகாவின் அரசாங்கமும், தமிழ் இனவாதத்துக்குள் வீழ்ந்து விட்டது. அது மட்டுமல்ல; 'ராவய', 'யுக்திய', பத்திரிகையாளர்கள் உட்பட N.G.O.துரைமாரும், போலி அறிவாளிகள் படித்தவர்கள் ஆகியோரும் கூட தமிழ் இனவாதத்துக்குள்ளேயே வாழ்கின்றனர். சிலபேர் பயத்தினால், இன்னும் சில பேர் ''டொலர்''களுக்காக அப்படிச் செய்கின்றனர். தமிழர் இனவாதத் தேவைக்கு மாக்ஸீய விளக்கம் கொடுக்குமளவுக்கு சிலர் முன்னேறியுள்ளனர். ''சுயநிர்ணயத்தை'' இனவாதத்தோடு சிக்கிக் கொண்டுள்ளனர்.

மறுபக்கத்தில் தமிழ் இனவாதத்துக்கு எதிராக ''சிங்கள மக்களின் உரிமை'க்காகச் சத்தமிடும் சிங்கள இனவாதம், பிரச்சினைக்கு சரியான தீர்வொன்றை அளிப்பதை சிக்கலாக்கிக் கொண்டுள்ளது. ''ஜனதா மிது ரோ'' நளின், அமரசேகர போன்றோர் சிங்கள இனவாதத்தைத்

பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தமிழ் இனவாதத்துக்குள் நுழைந்துள்ளார். அத்தோடு சிங்கள இனவாதத்திலிருந்து வரும் வற்புறுத்தல்களை இல்லாமலாக்குவதற்கும் முயற்சி செய்கின்றார்.

சிங்கள இனவாதிகளையும், தமிழ் இனவாதிகளையும் ஒரே நேரத்தில் திருப்திப்படுத்துவதற்காக அரசாங்கம் முயற்சி செய்ததையும் பார்த்தோம். ''தீர்வுப் பொதியை'ச் சமர்ப்பித்து அதன்மூலம் தமிழ் இனவாதிகளை தனது பக்கம் திருப்பிக் கொண்டுள்ளதோடு, ''வடக்கு யுத்த'த்தின் மூலம் சிங்கள இனவாதிகளையும் தனது பக்கம் திருப்பியுள்ளார். இரு இனவாதத்தையும் ''நிராகரிப்பவர்களை அவர் தாக்குகிறார். எப்படியிருப்பினும், கடைசியாக சிங்கள இனவாதத்தைப் பகைத்துக் கொள்ளாமலேயே தமிழ் இனவாதிகளுக்கு கப்பம் கொடுக்க முயற்சி செய்வது தெரிகிறது.

பழைய முதலாளித்துவ அரசாங்கங்களும்

வேண்டுமானால், L.T.T.Eயும் அரசாங்கமும் தமது பலாத்கார நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்க வேண்டும். அப்போது தான் யதார்த்தம் தெரியும்.

அடுத்து, சோஷலிஸப் புரட்சிக்காக தமிழ் மக்களை எப்படி சேர்த்துக் கொள்வது

நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் பிரிவினைவாதத்துக்குள்ளிருக்கும்

( அடுத்த இதழில் தொடரும் )

5ம் பக்கத்திலிருந்து **உருக்கு ...**

**ஐக்கியமுன்னணி அரசாங்கம் இந்த வஞ்சக அரசியலினால் ஐக்கிய தேசியக் கட்சியை மிஞ்சி, பல படி முன்னேறியுள்ளதையே காண்கிறோம். இது உருக்கு கூட்டுத்தாபன விற்பனை மூலம் மிக தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளனர். அதாவது ஐக்கிய தேசியக்கட்சி நிர்வாகத்தின் 55% பங்கை 962 மில்லியனுக்கு ரூபாய்க்கு கொடுக்க தீர்மானித்தபோது பொதுசன ஐக்கிய முன்னணி நிறுவனத்தின் 90% பங்கை 840 மில்லியனுக்கு மதிப்பிடுகிறது.**

**ஆயினும் இந்த அரசியல் அநீதிக்கு எதிராக தொழிலாளர் சார்பாக தளராது இருப்பதற்கு துணிவுள்ள ஒரு சில அமைப்புக்களே உளளன. அரசாங்கத்தின் பின் வரிசையில் இருப்போரும் வண்ணானின் வேலைசெய்யும் லொண்டரி குழுக்கள் முதல் பட்டி வீரகோன் சோஷலிஸ முகாம் வரை, வாசுவின் புரட்சிகர சக்திவரை எல்லா முற்போக்குவாதிகளும் 840மில்லியன் ரூபாயால் குறட்டை விடப்பட்டுள்ளது.**

**அதனால் எமது மக்கள் கேட்பதெல்லாம் நலிவுற்ற ஸ்திரமற்ற, முதலாளித்துவ அரசொனறின் பொருளாதார கொள்கை அல்ல. அனைத்து அரசியல் பண்பாட்டுக்கு எதிரான தீரமிக்க வீரத்துடன் அணிநடைபோட ஒன்று திரண்டு ஸ்தாபனப்படும்படியேயாகும்.**

www.padippakam.com



# 7வது

# கார்த்திகை வீரர்களின்

காாத்திகை வீரர்கள் பற்றிய நினைவை, கஷ்டப்படும் மக்கள் மத்தியில் மீண்டும் நினைவுகூர வேண்டிய நேரம் வந்து விட்டது. அந்த இருண்ட கார்த்திகையில் நினைவுகூரப்படும் வீரர்களின் மறக்கமுடியாத நினைவுகள் ஏழாவது வருடத்திற்கு காலடி எடுத்து வைத்துள்ளது.

நினைவுகள் பதியப்படும்பொழுது அதன் முக்கியத்துவத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும். கார்த்திகை வீரர்கள் மாத்திரமல்ல ஏப்ரல் வீரர்களும் பாட்டாளி வர்க்கத்தின் அமைப்பும்கூட உழைக்கும வர்க்கத்தின் மத்தியில் சரியாக இனங்காணப்படவில்லை. முதலாளித்துவ சமுதாயத்தில் அதன் சித்தாந்தத்திற்குப் பலியாகியுள்ள ஒரு சமுதாயத்தில் அதாவது அதிகாரத்தைப் பறித்துக்கொண்டுள்ள வர்க்கத்தின் சிந்தனைக்கு ஏற்பவே அறிமுகமாகியுள்ளது.

எனவே பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க அரசியலை வைத்தே வீரர்களின் நினைவை நாம் திரும்பிப்பார்க்கவேண்டியுள்ளது. அப்போதுதான் கார்த்திகை வீரர்களுக்குச் சொந்தமான அரசியல் உணர்வுகளின் தன்மைக்கு அப்பால் பிரகாசிக்கமுடியும். காாத்திகை வீரர்களின் நினைவுகளோடு இந்நாட்டின் புரட்சிகர ஸ்தாபனத்தையும நினைவுகூரும்போது, நினைவுஸ்தூபியின் முன்னால் தலை தாழ்ந்து வருகின்றது. 89ல் பயங்கர மனித படுகொலையின்போது இந்நாட்டின் புரட்சிகர அமைப்பின் ஸ்தாபகரும் மக்களின் உண்மையான வழிகாட்டியும் தலைவருமான தோழர் ரோஹண விஜேவீரா எதிரிகளினால் படுகொலை செய்யப்பட்டார். அத்தோடு தோழர் உபதிஸ்ஸ கமநாயக உட்பட அரசியல் குழு உறுப்பினர்கள் கட்சியின் தலைமையிலிருந்து ஆதரவாளர்கள் வரை கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்வரை படுகொலை செய்யப்பட்டனர். எனவே கார்த்திகை நினைவுகள், வேதனைகள் நிறைந்த சம்பவமாக இலங்கை மக்கள் மனதில் பதிந்துவிட்டது. மறைந்தவர்களை நினைவுகூருவது வேதனைக்குரியது போன்று, புரட்சிவாத அமைப்புக்கு அதன் தோழர்கள் மாத்திரமல்ல தலைவரின் பிரிவும் மிகமிக வேதனை நிறைந்த சம்பவமாகும். மக்கள் விடுதலை முன்னணியைப் பற்றிப் பேசும்போது எப்படி ரோஹண விஜேவீராவைப் பற்றிப் பேசப்படுகிறதோ அதேபோல் அதோடு சேர்ந்த அரசியல் தொடர்பின் ஊடாகவே கார்த்திகை வீரர்களையும் நினைவை கூரவேண்டியுள்ளது. அந்த அந்தகார கார்த்திகையில் ரோஹண விஜேவீர கொலைசெய்யப்பட்டதனால் மாத்திரமல்ல ரோஹண விஜேவீர என்ற மதிப்புக்குரிய தலைவனை கொலை செய்தது ஏன் என்ற கேள்வியும் இத்தோடு எழுந்துள்ளது.

முதலாளித்துவ சித்தாந்தங்கள் வெற்றிகரமாக புகுத்தப்பட்டிருந்த ஒரு சமுதாயத்தில் ..அதற்கு எதிரான பாட்டாளி வர்க்கத்தின் கருத்தை முதன் முதலாக வெளியிட்டவர் தோழர் ரோஹண விஜேவீர 60 தசப்தங்களில் மக்கள் துரோகிகளுக்கு எதிரான புரட்சிகர அமைப்பான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) உருவாகியது. இந்நாட்டின் உழைக்கும் வர்க்கத்திற்காக மக்களின் உண்மையான புரட்சிகர அமைப்பு தோன்றியது. எல்லாவிதமான எதிரிகளின் பார்வைகளுக்கு பலியாகிக்கொண்டிருந்த மக்கள் மத்தியில் வர்க்கரீதியான



துவத்தின் கைக்கூலிகளான து மார்களால் இந்த புரட்சிகர அமைப்ப ஜேவிபி வர்ணிக்கப்பட்டது. இதன் மு தோழர் ரோஹண விஜேவீரவுக்கு அமைப்புக்கும் எதிராக எதிரிகள் கோணத்தில் செயல்பட்டனர். 71- எழுச்சி இப்படியாகத்தான் வரலாற் பதியப்பட்டது. எதிரியின் தாக்குதலுக் பதிலாக திருப்பித்தாக்கவேண் நிலைமை இளம்புரட்சிவாத அமைப்புக் ஏற்பட்டது.

என்றாலும் எதிரியின் அடக்குமுற சிறைக்கூடங்கள், சித்திரவ முகாமுக்குள் வரையறுக்கப்படவில்ல சித்திரவதை செய்துகொல்லுத டயருக்கு இரையாக்குதல் மாத்திரமல் அதனினும் மேலாக அமைப்புக்கு எதிர அவதூறு செய்யுமளவுக்கு எதிரிகளி அடக்கு முறை பாரதூரமாக இருந்தத பழைய இடதுசாரிகளும் முதலாளித்து வர்க்கமும், அமைப்பிலிருந்து ஓடி துரோகிகளும் இந்த விடயத்தி முன்னின்று செயல்பட்டனர்.

இப்படியான அவதூறுகளுக் மாத்திரமல்ல எல்லாவிதமா துரோகங்களுக்கும் முகம் கொடு க்கக்கூடிய தகுதிபடைத்த புரட்சிவாதிகள உருவாக்க ஜேவிபியால் முடியுமா ருந்தது. இதனால் தான் எழுச்சியின்போது அடக்கப்பட்ட ஜேவி மீண்டும் மக்கள் மத்தியில் தலைதூக் முடிந்தது. அமைப்பாளராகவும் பிரச்சா பொறுப்பாளராகவும் நினறு தலைமை துவமளித்து அதனை வழி நடத்தியவ தோழர் ரோஹண விஜேவீர அவர்களே அதன் மூலம் பழைய முதலாளித்து சித்தாந்தங்களை முறியடிக் முடியுமாயிருந்தது.

இந்நாட்டுப பாட்டாளி வர்க்கத்த தூண்டும் நோக்கத்தோடு செயல்பட் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ''தேசிய பிரச்சினையும் பாட்டாளி வர்க்கத்தி தீர்வும்'' என்ற நூலை எழுதினார் இப்படியாக எதிரிகளின் செயல்களுக் அடிமேல அடிகொடுத்து அவர்களை திக்கு முக்காட வைத்தார். அது புரட்சிக அமைப்பான ஜே.வி.பியை மென்மேலு

## செங்கொடிக்கு வரைவிலக்கணம்

## வகுத்த தந்த தலைவன

சிகிரிய ஓவியமாய்
அடக்கி ஒடுக்கப்பட்ட
பாட்டாளி வர்க்கத்தின்
சிந்தையில் பதிந்துவிட்ட
மக்கள விடுதலை முன்னணி
சிற்பியே! - செங்கொடிக்கு
வரைவிலக்கணம் வகுத்து
வழிக்காட்டி போலித்
தலைமைகளைத் தலைகுனிய
வைத்த தன்னேரில்லாத்
தலைவனே!
மார்க்ஸிய
தத்துவத்தின்
திசையறிக்கருவியே!

துயருரும் மக்களுக்குத்
தோள் கொடுத்தத்
தொண்டனே!
கொள்கைக்காய் துணிந்து
போராடும் தோழர்களை
உருவாக்கிய பிரம்மதேவனே!

நாட்டை நரகத்தனமான
முதலாளித்துவத்திலிருந்து
விடுவிக்கப் பாடுபட்ட
குற்றத்துக்காகவா
நீ கொடூரமாகக்
கொல்லப்பட்டாய்!

உன் இறப்பின்மூலம் நாங்கள்
கற்றுத்தெளிந்த பாடங்கள்
ஏராளம், ஏராளம்!

மனிதனை நேசிக்காதவன்
மனிதனலல என்றஉன்சொல்,
கட்சி அரசியல பேரால்
கடைவிரித்து பேரம் பேசி
பணம்கூட்டும் கும்பலுக்கு
தலையில் விழுந்த பாறாங்கல்

பிறந்த பொன்னாட்டை
மறந்தும் நேசிக்காத
வேஷதாரித் தலைவர்கள்
நடுவில் நீ, தாயகத்தை
நெஞ்சில் சுமந்து
நினைவில் வாழ்ந்த நாயகன்!

நீ வழிவகுதத பாதை
கோட்டான்களும் ,கழுகுகளும்,
குள்ளநரிகளும், நயவஞ்சகர்களும,
காட்டிக்கொடுப்போரும்
சென்ற வழியல்ல
போர்க்குணம் கொண்டோரும்
புரட்சிமனம் கண்டோரும்
மார்தட்டிச் சென்ற
புதிய பாதையன்றோ

ஒடுக்கப்பட்ட மக்களுக்காய்
உயிர்கொடுத்த
உனக்கு
உண்மையில் மரணமில்லை
மண்ணும்
விண்ணும் உள்ளவரை
உன் நாமம் வாழும்

சித்தாநததைக்கொண்டு செல்வது கஷ்டமாகவே இருந்தது என்றாலும், இந்தககாரியத்தைச் செய்வதற்கு தோழர் ரோஹண விஜேவீரவுக்கு திறமை இருந்தது அரசபலம், அதிகாரபலம், பணபலம எதுமே இல்லாமல் புதிய அரசியல் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு செல்ல அவரால் முடியுமாயிருந்தது. பணபலம், அரசியல் செல்வாக்கு, குடும்ப அந்தஸ்து மாத்திரமே அரசியல் அமைப்பொன்றை உருவாக்கவேண்டிய

# ஞாபகார்த்தம்

தகுதிகளாக கருதப்பட்ட காலத்தில், மேற்கூறிய தகுதிகள் எதுவுமே இல்லாமல் மக்களுக்கான புரட்சிகர கட்சியாகிய ஜேவிபியை உருவாக்கினார்.

மக்கள் மத்தியில் வேலை செய்வதற்காக, மக்கள் மத்தியில் சுயமாக வேலை செய்யக்கூடிய , மக்களிடையே வாழும் கட்சித்தொண்டர்களை வழிகாட்டிகளை உருவாக்கியது. இந்த தன்மை வேறு எந்த இடதுசாரி அமைப்புகளிடம்காணப்படவில்லை. முதன் முதலில் தொழில் புரட்சிவாதியாக மக்களோடு தோழர் ரோஹண விஜேவீர இணைந்து அவர்களுடனே வாழ்ந்து அவர்களிடமே படித்துக்கொண்டு , அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய அமைப்பாளர்களான புரட்சிவாதிகளை உருவாக்கினார். முதல் அமைப்பாளாராகவும் முதல் புரட்சிவாதியாகவும் முட்டை சுமந்து, செலவுக்காக பணம சேர்த்து, பட்டினிகிடந்து மக்கள் மத்தியில் அரசியல் செயல்பாட்டுக்கு உயிரூட்டிய முதல் புரட்சிகர வழிகாட்டி தோழர் விஜேவீர ஆவார்.

'' இளைஞர்களைப் பலியெடுக்கும் '' சி.ஐ. ஏயின் வலையென்று முதலாளித்



பன்மடங்கு பலம் பெறச்செய்தது.

71 எழுச்சியின்போது அரச அடக் முறையால் ஒடுக்கப்பட்ட ஜேவிபி 80 களி மக்கள் மத்தியில் தனியான இடத்தை பிடிக்கும் அளவுக்கு வளர்ச்சிகண்டது

5ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



4ம் பக்க தொடர்ச்சி

**கார்த்திகை வீரர்களின் ஞாபகார்த்தம்...**

திரண்டெழுந்த எதிரிகள் கட்சியை (ஜே.வி.பி) தடைசெய்தது மாத்திரமல்ல, தோழர் ரோஹண விஜேவீர அவர்களை கொலை செய்வதற்கும் முயற்சித்து, 1989 இருண்ட கார்த்திகையில் தோழர் ரோஹண விஜேவீரவை படுகொலை செய்தனர். உழைக்கும் மக்களின் விடுதலைக்காக உழைத்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இவர் கொலை செய்யப்பட்டபோது எதிரிகளின் நோக்கம் தெளிவாகத் தெரிந்தது. ஜே.வி.பியையும் தோழர் விஜேவீர என்ற நாமத்தையும் அழிதொழித்து பாட்டாளி வர்க்கத்தைப் பிளவுப்படுத்தி ஜே.வி.பியை மக்கள் மத்தியிலிருந்து துடைத்தெறிவதற்கு எதிரிகள் முயற்சி செய்தனர். மக்களின் சோஷலிஸ எதிர்ப்பார்ப்பை பின்நோக்கி தள்ள முயற்சி செய்தனர். ஆயினும் எதிரிகளின் நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை.

ஒரு தனிநபரின் பலத்தைக்கொண்டு கட்சியை உருவாக்காமல், கட்சிக் குள்ளேயே தலைவர்களை உருவாக்கினார்: ''ஒரு தலைவன் ஆயிரம் தலைவர்களை உருவாக்குவான்'' என்ற உண்மையை கட்சிக்குள் உருவாக்கிக்காட்டினார். ஆயிரக் கணக்கான விஜேவீராக்களையும் சமநாயக்கக்களையும் கட்சிக்குக் கேட்டாரேயன்றி தான் மட்டும் தான் தலைவன் என்ற எண்ணம் அவரிடம் இருக்கவில்லை. தனிநபருக்கு சொந்தமான தலைமைத்துவத்தையும் அவர் உருவாக்கவில்லை. 87-89 மனிதப்படு கொலையின்போது அரசாங்கத்திற்கு ஜே.வி.பியையும் தோழர் விஜேவீரவையும் அழிப்பதே நோக்கமாக இருந்தது. அந்த முயற்சியில் அவர்கள் தற்காலிகமாக வெற்றிபெற்றபோதும் அவர்களுடைய நோக்கம் உண்மையாகவே தோற கடிக்கப்பட்டது.

எந்த சந்தர்ப்பத்திலும் எந்த அடக்குமுறைகளுக்கும் முகம் கொடுக்கக் கூடிய சக்தியை ஜே.வி.பிக்கு ஊட்டியவர் தோழர் விஜேவீர ஆவார். கட்சிக்காகவும், மக்களுக்காகவும் வேண்டி, தேவையான சந்தர்ப்பத்தில் உபாய மார்க்கங்களுக்குத் திரும்பும் மார்க்ஸ்வாத அரசியல் பிரயோகத்தை புரட்சிவாத அமைப்பில் கொண்டுவந்தவர் தோழர் விஜேவீர ஆவார்.

இப்படியாக பல கோணங்களில் கார்த்திகை வீரர்களின் நினைவை நாம் காணமுடியும். அதுசந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டத்தை செயல்ரீதியில் கொண்டு வருகிறது. வர்க்கத் துரோகிகளுக்கு எதிரான உபாய மார்க்கங்களை காட்டுகிறது. தோல்வியை ஏற்றுக்கொள்வது போலவே வெற்றியைப் பாதுகாத்துக் கொள்ளும் முறையையும் காட்டித்தருகிறது. மக்களின் வழிகாட்டி யாகவும், அமைப்பாளராகவும் எப்படி செயல்படுவது என்பதை சொல்லித் தருகிறது. தலைவர்களை உருவாக்குவ தோடல்லாமல் தலைவர்கள் ஆகவும் வழிசெய்கிறது. சர்வதேசீயவாதிகளாக கடமைகளைச் செய்வதற்கும் படிப்பிக்கிறது.

மிகவும் பரிச்சயமான அரசியல் பிரயோகத்துக்காக தோள் கொடுக்கவும் கார்த்திகை நினைவு நம்மை வற்புறுத்து கிறது. தோழர் விஜேவீரவின் அரசியல் பிரயோகம் நமக்குப் படிப்பிப்பது இதனைத்தான். உயிர்த்தியாகம் செய்த ஒவ்வொரு சகோதரியிடத்திலும் சகோதரனிடத்திலும் நாம் காண்பது இதனைத்தான்.

**''தொழிலாளர் வர்க்கத்தினாலும், விவசாயிகளினாலும் தாங்கிக்கொள்ள முடியாத அளவு மோசமான வாழ்க்கை** நிலை, நாளுக்கு நாள் அதிகரிக்கும் வர்க்கச் சுரண்டல், வர்க்க அடுக்கம், இளைஞர் களி[illegible] அதிகரிக்கும் தொழில் பிரச்சினை, வா[illegible]ம் வாழ்க்கைச் செலவு, சிதைந்து வரும் வாழ்க்கைநிலை, அதிகரிக்கும் வறுமையின் தன்மை, பொருளாதாரக் குலைவு போன்ற இவை அனைத்தையும் கணக்கெடுக்காமல் மறந்துவிட எம்மால் முடியாது. அதனால், இந்த அனைத்து துர்ப்பாக்கியங்களுமில்லாத, மனிதனை மனிதன் வாழவைக்கக்கூடிய, சுகத்தையும் சௌபாக்கியத்தையும் ஏற்படுத்தும், தனிநபர் சொத்துடைமையற்ற, மனிதனால் மனிதன் சுரண்டப்படாத, வர்க்கப்பேத மற்ற, புதிய சமூகமுறையைக் கட்டியெழுப்ப செயல்படவேண்டியுள்ளது. இந்த முத லாளித்துவ சமூகமுறைக்குள்ளே நாம் சிலவற்றைப் படித்துக்கொண்டோம்; சிலவற்றைக் கண்டோம்; விளங்கிக் கொண்டோம்; அதன் மூலம் சில தீர்மா னங்களுக்கு நாம் வந்தோம். அந்தத் தீர்மானங்களின் மூலம் செயல் படுவதற்கும், அந்த யோசனைகளைத் தெளிவுபடுத்த, அதற்காக மக்களை அணிதிரட்ட அமைப்புக்களை உருவாக்க, அதன்மூலம் புதிய உலகத்தை நோக்கி முன்னேற நாம் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)க்குள் ஒன்றி ணைந்தோம். சமூகத்தில் ஒவ்வொரு மனி தனுக்கும் சிறந்த வாழக்கை நிலையை உரிமையாக்கும் பொருளாதாரநெருக்கடி, விரக்தி, தொழில்பிரச்சினை, தரித்திரம், தொற்றுநோய் இல்லாத, வர்க்கபேதமற்ற, சுரண்டலற்ற, எல்லாவிதமான அநியாயங்களும் ஒழிக்கப்பட்ட புதியதோர் உலகை, புதியதோர் சமுதாயத் தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை மனிதவர்க்கத்திற்கு உரத்துக்கூறுகிறோம். தோழர் ஏங்கல்ஸ் கூறியதுபோல், மனித வர்க்கம் ஒன்று சோஷலிஸத்தை நோக்கி முன்செல்ல அல்லது **மிலேச்சதனத்தை** நோக்கி பின்னோக்கிச் செல்லவேண்டிய காலகட்டத்திற்கு வந்துள்ளது என்பதை அனைத்து தேசமக்களுக்கும் கூறுகிறோம். அதிகமான கஷ்டத்திற்கு மத்தியிலும் பாரிய முயற்சிகளின் ஊடாக தியாகங்களுக்கு மத்தியில் நூற்றுக்கணக்கான வருடங் களாக மனிதன், ஒரு நல்ல உலகை நோக்கி பயணம் செய்துள்ளான். கோடிக்கணக்கான மக்கள், வருங்கால சமுதாயத்துக்காக தமது புதைகுழிகளுக்கு மேலாகப் பாய்ந்து சென்று அதிக சுகத்தையும், சந்தோஷத்தையும் அதிக சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்வதற்காக வழிவிட்டு அதற்காக அநேக சந் தர்ப்பங்களில், பலவிதமாக உயிர்த்தியாகம் செய்துள்ளனர்.

('எம்மை அழித்தாலும் நாம் எழுப்பிய குரல் ஓயாது' -பக்கம் 150. இரண்டாம் பகுதி)

1ம் பக்க தொடர்ச்சி

**ரோஹண விஜேவீரவின் நாமம்...**

கொண்டுவந்திருந்த செம்மலர் செண்டுகளை வைத்து வீரவணக்கம் செலுத்தி அந்த மாபெரும் மனிதரையும் சகவீரர்களினதும் உயிர்களுக்கு உயிர்கொடுக்க முடியுமென்றும், அதைச் செய்ய முடியுமென்றும் உறுதியுடன் திடச்சங்கற்பம் செய்தனர். இந்த சோகத்தை இதயத்தில் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் கண்ணீரால் அஞ்சலி செலுத்தினர்.

தனது பெற்றோர்களின் மூலம் தெரிந்துகொண்ட, ஒருநாளும் கண்டிராத, இந்த மாபெரும் மனிதரின் நினைவுச்சின்னத்தின் முன்னால் தான் கொண்டுவந்த செம்மலர்ச்செண்டை வைத்து, முழந்தாளிட்டு வீரவணக்கம் செலுத்திய அவர்கள், ''எமது எதிர்காலத்தை சுபீட்சமாக்க கருத்தில் கொண்டு விடா முயற்சியில் ஈடுபட்ட தந்தையே, நாம் அந்த காரியத்தை ஈடேற்றி வைப்போம்.'' என்று உறுதி பூண்டனர்.

கார்த்திகை கலாச்சார விழாவின் போது தலைமைதாங்கிய மத்தியக்குழு உறுப்பினர் தோழர் சேனரத்தன த சில்வா, அந்த மாமனிதரை நினைவு கூர்ந்து நா தழுதழுக்கப் பேசி, வீரர்களை நினைவுகூரும் முகமாக இரண்டுநிமிட மௌனஞ்சலி செய்து ஆரம்பித்து வைத்தார். மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் தோழர் டில்வின் சில்வாவும், பிரச்சாரச் செயலாளர் தோழர் விமல வீரவன்ச, கல்விச்செயலாளர் தோழர் அஜித் குமாரவும், சோஷலிஸ மகளிர் சங்கத்தின் தோழியர் கிருஷாந்தியும் சோஷலிஸ மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் அரவிந்த திசாநாயகவும் மேடையில் அமர்ந்திருந்தனார். சிறப்புரையை தோழர் டில்வின் சில்வா நிகழ்த்திய பின்பு கார்த்திகை வீரர்கள் பற்றிய கலந்துரையாடல் மண்டபமாக இளைஞர் மண்டபம் மாறியது. தோழர் விம[illegible] [illegible]ரவன்ச கலந்து ரையாடல் மண்டபத்தை வழி நடத்தினார். பின்னர் விடுதலை கீதம் இசைக்கப்பட்டது. இறுதியாக நன்றியுரையை தோழர் சேனரத் நிகழ்த்தினார். இறுதியாக ''கருங்கல்லை அறுவடை செய்வோம்'' என்ற விவரணப்படம் ஒனறு காட்டப்பட்டது. அதில் தற்போதைய தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க இத்தாலியில் இடதுசாரிகளுடன் சேர்ந்து நடாத்திய மேதினமும், 1982ல் ஜனாதிபதி தேர்தலின் போது மாமனிதர் விஜேவீர ஆற்றிய உரையையும் கண்ட மக்கள் தமது ஆரவாரக் கரகோஷத்தின் மூலம் தங்களது உத்வேகத்தைத் தெரிவித்துக்கொண்டனர். கார்த்திகை வீரர்களின் நினைவை சுமந்திருந்தது மக்கள் மாத்திரமல்ல இயற்கை அன்னையும் தன்து கண்ணீரை மழையாகப் பொழிந்து அஞ்சலித்தாள்.

## கொள்ளையோ கொள்ளை

# உருக்குக் கொள்ளை

சரித்திரத்தில் ஓர் நிமிடத்தில் மனிதகுல அபிவிருத்தி பாதையை வலுமிக்கதாக்க, மனிதனை அபிவிருத் தியை நோக்கி இட்டுச்செல்ல சக்தி மிகுந்த அடித்தளமிட்ட உருக்கு, இந்த நிமிடம் நலிவடைந்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால்....

துப்பாக்கியையும் பீரங்கியையும் உருவாக்கியதும், கத்தியையும் வாளையும் உருவாக்கியதும் உருக்காலேயாகும் அவை ஒடுக்கப்பட்டவர்களின் இதயத்தை சிதைத்து, கழுத்தை துண்டாடியும், அடக்கி ஒடுக்கவும், ஆள்வோரின் ஆயுதமாய் இருந்தது என்று எமக்கு சரித்திரம் உறுதியிட்டுக் செய்து கூறுகிறோம்.

இலங்கை அரசாங்கத்திற்கு சோவியத் நாட்டால் அன்பளிப்பாக கிடைத்த உருக்கு கூட்டுத்தாபனம் தற்போது பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங் கத்தால் இல்ங்கை தொழிலாளர் வர்க்கத்தின் கழுத்தை நெரிப்பதற்காக ஆயுதமாகப் பயன்படுத்தி நடைமுறை படுத்துவதற்காக ஹன்ஜூன் கொரிய கம்பெனிக்கு பொறுப்பளிக்கப்படடுள்ளது.

சுரண்டி விழுங்கும் பேராசையில் இருக்கும் ஏகாதிபத்தியவாத வெறியர்களால் விழுங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிறுவனத்தை சாபமுற்ற ஆசிர்வாதர்களின் கீழ்த்தரமான யோசனை ஒன்றெனவும் உருக்கு கூட்டுத்தாபன தேசிய சொத்து தற்போது ஏகாதிபத்தியவாதிகளின் மூலதனமாக மாறியுள்ளது.

நிறுவனமொன்று நஷ்டத்தில் இயங்குமென்றால் அரசாங்கம் என்ன செய்யவேண்டும்? அதில் திட்டமிட்ட சரியான நிர்வாகத்தை ஏற்படுத்து வதேயாகும். அப்படியில்லாமல் நிறுவனத்தை விற்பதென்றால் என்ன? முகத்தோடு கோபித்துக்கொண்டு மூக்கை வெட்டிக்கொள்வது போன்ற வேலையாகும்.

எப்படியெனினும் உருக்கு கூட்டுத்தாபனம் என்பது சரித்திரத்தில் நட்டத்தில் இயங்கிய நிறுவனம் அல்ல. அது 1991 - முதல் 1996 செப்டம்பர் வரை கிடைத்த மொத்த லாபம் 833 மில்லியன் ரூபாயாகும். அதேவேளை அதை விற்பதற்கு மதிப்பிட்ட பெறுமதி 840 மில்லியனாகும்.

இங்கே அடிப்படையில் எம்மால் சுட்டிக்காட்டப்படுவது உருக்கு கூட்டுத் தாபனத்தை விற்பதன்மூலம் பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங்கம் திட்டமிடாத வழியில் இலங்கை பொருளாதாரத்தை அழிவுக்கு இட்டுச்சென்றிருப்பது மாத்திரமல்ல. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிற்போக்கு, கீழ்த்தரமான ஈனமிக்க அரசியல் படிப்பினையையும் நாம் இங்கு கவனத்தில் எடுக்கவேண்டும். முன்னர் ஆட்சி காலத்தின்போது கூட்டுத்தாபனத்தின் 55% பங்கை விற்பதை எதிர்த்த ஸ்ரீல. சு. கட்சி, -ல. ச. ச. கட்சி, க. கட்சி ஸ்ரீலங்கா மக்கள் கட்சிகளால் தனியார் மயத்திற்கு எதிரான அரசியல் படிப்பினையை வெளிப் படுத்தினர். அது மாத்திரமல்ல மக்கள் மனோபாவத்தில் தாம் தனியார் மயம் தொடர்பாக கடைப்பிடிக்கும் நிலைப் பாட்டைத் தெளிவுபடுத்தினர்.

தற்போது பசுத்தோல் போர்த்திய புலியாக மாறி, உருக்கு கூட்டுத்தாபனத்தின் யந்திரங்களைப் புதுப்பிப்பதாககூறி செய்யவேண்டிய ஒரே காரியம் என்பதே இந்த வஞ்சக அரசியல்வாதிகளின் கருத்தாகும்.

17 வருட சாபமிகு ஐக்கியதேசிய கட்சி ஆட்சியால் அந்த வரலாற்றில் அடியெடுத்து வைத்த தேசியசொத்தை தனியார் மயத்தினால் மறைத்து மிகவும் வஞ்சகமான முறையில் விற்கப்பட்ட சரித்திரத்தை நாம் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தியதும் பொதுசன

3ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

செஞ்சக்தி

198/19 பஞ்சிவத்தை வீதி, கொழும்பு -T/P 345594

மக்கள் விடுதலை முன்னனியின் (J.V.P) சர்வதேச தலைமைபீடத்தின்

முகவரியும் பெக்ஸ் இலக்கமும்

Arunodaya
B.P 485
75528 Paris
Cedex 11
France
Fax 00331 40330414

Post Box 194
Carnegie
Victoria 3163
Australia
Fax 0061 3 943693 12

# விஜேவீர, கமநாயக்க

## கொலைகளை அம்பலப்படுத்தும் பொறுப்பு...

ரோஹண விஜேவீர, கமநாயக தோழர்களை யூ.என்.பி. அரசாங்கத்தின் கொலைகாரப் படைகளால் கைது செய்யப்பட்டு, மிலேச்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு, பின் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்ட பினனர் எரித்துசாம்பலாக்கப்பட்டது முழுஉலக மக்களுக்கும் தெரிந்த விடயம்.

தோழர் ரோஹண விஜேவிர கைதுசெய்யப்பட்டபோது, அவரை அடையாளம் காண்பிப்பதற்காக சென்றவர்களில் விக்டர் ஐவன், கெலி சேனநாயக்காவும் கேகாலையில் பீரிஸ் என்ற புனைபெயரில் தற்போது மறைந்துகொண்டு ஜே.வி.பியைப் பற்றி இரண்டு புத்தகங்கள் எழுதியிருக்கும் நபர் உட்பட சரச சல்லாப உல்லாச செயல்களினால் கட்சியிலிருந்து வெளியேற்றபட்ட பல நபர்களும் உள்ளார்கள் என்பதை நிரூபிக்கக்கூடிய சாட்சிகள் இன்றும் உயிருடன் உள்ளனர்.

'ஓ.ஃப்ஸ கம்பைன்' இராணுவ தலைப்பீடத்தில் வைத்து விக்டர் ஐவன், கெலி சேனநாயக, பீரிஸ் (ஜயலத்) போன்ற துரோகிகளால் விசாரணைக்கு உட்படுத்தி சித்திரவதை செய்யப்பட்ட சில தோழர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளதால் அந்த உண்மைச் சம்பவங்களுக்கு உரிய சாட்சிகள் உயிரோடுள்ளனர்.

தோழர் விஜேவீர, தோழர் கமநாயக இருவரும் கைதுசெய்யப்பட்ட நிமிடத்திலிருந்து சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்படும் வரை ஒவ்வொரு சம்பவங்களையும் நேரில் கண்ட, ஆயினும் அவற்றைத் தடுக்கமுடியாத நிலையிலிருந்த பற்பல தராதரத்திலிருந்த அதிகாரிகள், இராணுவ வீரர்கள், சிவில் ஊழியர்கள் அனைவரும் அந்த கொலைகள் தொடர்பாக சாட்சியமளிக்கத் தயாராக இருக்கின்றனர்.

மேலும் கொழும்பு கனத்தை மயானத்தின் பொறுப்பாளர், காவல்காரர், கனத்தை அருகில் வாழும் அயலவர்களும், கனத்தைக்குரிய எழுத்துமூல சாட்சிகள், அனைத்தும் சாட்சிகளாக உள்ளன.

தோழர் விஜேவீரவும், தோழர் கமநாயக்கவும் கொல்லப்பட்டதற்குப் பொறுப்பான நபர்களும் அந்த சம்பவங்களுக்குரிய தெளிவான உண்மையான சாட்சிகளும் ஆதாரங்களும் இருந்தும் கூட அனைத்து அரசியல் படுகொலைகளையும் தேடிப்பார்த்து கொல்லப்பட்டவர்களு[க்கு] உயர்பட்ச நியாயமும் நீதியும் வழங்குவதாக தேர்தல் பிரச்[சார] மேடைகளில் உறுதியிட்டு முழங்கிய பொதுசன ஐக்கியமுன்ன[ணி] ஆட்சி பீடமேறி இரண்டுவருடம் கடந்தும் கூட, இன்[னும்] மிகமுக்கியத்துவம் வாய்ந்த இந்த இருவரும் கொலை செய்[யப்] பட்டதைப்பற்றி அலசி ஆராய்வதற்கு இந்த அரசாங்கத்தில் எந்த[வொரு] முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

ரோஹண விஜேவீர, உபதிஸ்ஸ கமநாயக்க படுகொலையைப்ப[ற்றி] விசாரணைக்கமிசன் ஒன்றை அமைக்கவோ, அல்லது சட்டரீதியா[ன] நடவடிக்கை எடுககும் முயற்சியை தடுக்கும் செயற்பாடுகளி[ல்] ஈடுபட்டுக்கொண்டிருக்கும், யூ.என்.பி. கொலைகாரர்களுடன் சேர்ந்[து] படுகொலை நாடகத்தில் ஈடுபட்டு கரங்களில் இரத்தக்கற[ை] படிந்தவர்கள், தற்போது பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங்கத்துக்கு பிரபலமடைந்திருக்கும் சிலர்தான் என்று, இக்கொலைகளை அம்பலத்துக்குக் கொண்டுவர அக்கறையிலுள்ள பொதுச[ன] ஐக்கியமுன்னணி அரசாங்கத்திலுள்ள சிலர் தெரிவிக்கின்றனர்.

தோழர் ரோஹண விஜேவீர கொலைசெய்யப்பட்டதுபற்றி ஒருமுறை 'தேசிய மீட்பு முன்னணி' பாராளுமன்ற உறுப்பினர் தோழர் நிஹா[ல்] கலப்பதி பாராளுமன்றத்தில் பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுரத் ரத்வத்தையிடம் கேள்வி எழுப்பியபோது, அதற்கு அவர், 'போதி[ய] சாட்சிகள இல்லையென்றும், தேவையானால் மேல் மாகாண, வடமே[ல்] மாகாணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காணாமற் போனவர்களை தேடிப்பார்க்கும் கமிசனுக்கு புகார் செய்யும்படியும்' கூறினார்.

இந்நிமிடத்தில் துரோகியாகவும் காட்டிக் கொடுப்பவனாகவு[ம்] மாறியிருக்கும் ஆரிய புலேகொடையால் எழுதிக்கொடுக்கப்ப[ட்ட] சிறுதுண்டு கடிதத்தைக் கூட, தமது ரூபவாஹினியிலும் வானொலியிலு[ம்] உயர்ந்த பட்ச விளம்பரத்தைப் பெற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கு[ம்] அரசாங்கம் தோழர் நிஹால் கலப்பதி பாராளுமன்றத்தில் தோழ[ர்] ரோஹண விஜேவீர கொலைபற்றி கமிசன் அமைக்கும்ப[டி] கேட்டபோது, அனுரத்த ரத்வத்தை மேற்கண்டவாறு பதிலளித்தார்.

தோழர் விஜேவீரவும் தோழர் கமநாயக்கவும் யூ.என். பி. கொலை காரர்களால் கைதுசெய்யப்பட்டு படுகொலைசெய்யப்பட்டது முழு உலகவாழ் மக்களுக்கும் நன்றாகத் தெரிந்த விடயமாக இருந்தபோது[ம்], அதுபற்றி பாராளுமன்றத்தில் தோழர் கலப்பதியால் கேள்வி எழுப்பிய போது சாட்சி இல்லையென்று மூடிமறைத்த மழுப்பும் வெட்கம் கெட்ட பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆரிய புலேகொடையின் குரங்கு காட்டிவித்தையின் மூலம் ஜேவிபியை சிதறடிக்கமுடியுமென்று கனவு காணும், அரசாங்கம் இப்போது திடீரென அந்த கொலை தொடர்பாகவும், அரசியல் கைதிகள் தொடர்பாகவும் கதைகளை அவிழத்துவிடடுக்கொண்டிருக்கின்றனர்.

எவனது பேச்சின் மூலமாவது, விஜேவீர, கமநாயக்க கொலைகள் பற்றி தேடிப்பார்த்து கொலைகாரர்களுக்கு தண்டனை வழங்கக்கூடிய பூரண அதிகாரமுள்ள கமிசனொன்றை அமைப்பது பொதுசன ஐக்கியமுன்னணியின் கட்டாய கடமையாகும். அவர்கள் தேர்தலி[ல்] வெற்றியீட்டியதும் அந்த வாக்குறுதிகளை முன்வைத்தேயாகும்.

தோழர் விஜேவீர, தோழர் கமநாயக்க கொலை செய்யப்பட்டு ஏழு ஆண்டுகள் பூாத்தியாகும் இந்த வேளையில் முழு இலங்கை வாழ் மக்களின் உயர்ந்த பட்ச கோரிக்கையும் எதிர்ப்பார்ப்பும் இதுவாகும்.

அதை நடைமுறைப்படுத்தும் அடிப்படையான பொறுப்பும் தகுதியும் இருப்பது அரசாங்கத்திடமேயன்றி ஜே.வி.பியிடமோ மக்களிடமோ அல்ல.

# ஷெல்.....கேஸ்.. என்ற மனித (மிருக) முகத்தின் கதை

விற்பதற்காக தொழிலாளி ஒருவனுக்கு மிஞ்சியிருப்பது தனது உழைப்பென்ற விற்பனை பொருளை மாத்திரமே. அது அவனுக்கு சொந்தமான எதுவும் இல்லாதிருப்பதால், ஆயினும் ஓர் நாட்டின் சொத்துக்களின் பெறுமதியை பெறுக்கொள்வதற்காக இலகுவான இலாபம் மிக்க விற்பனைப் பொருள் என ஏலத்தில் விடுவது நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பை மாத்திரமேயாகும். ஆனாலும் இறுதியில் அரசு சொத்தென பெறுமதியைப் பெறுவது இங்கு கூறப்படும் தொழிலாளியின் உழைப்பின் மற்றொரு வடிவம் என்பதைஏற்றுக்கொள்வதற்கு முதலாளித்துவ அரசாங்கம் ஒருபோதும் விரும்பாது. ஆயினும் அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உண்மை அதுவென்றால் அதை ஏற்றுக கொ[ள்வ]தற்கு எமக்கு நேரிடும்.

கேஸ் தொழில் என்பதும் அதே போன்ற நாட்டின் அரசாங்க ஆதரவுபெற்ற மக்களின் சொத்தாகும். ஆனாலும் முதலாளித்துவ பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத திற்கென்றால் அதுசொத்தாகும். எனவே அதை 'ஷெல்' என்ற கம்பெனிக்கு விற்கப்பட்டது.

அரசநிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதுபற்றிய மக்களின் எதிர்ப்பை கடுகளவேனும் கணக்கிலெடுக்காத அரசாங்கத்தால் தொழிலாளர் வர்க்கத்தையும் முழுநாட்டு மக்களையும் இரக்கமின்றி கைவிடப்பட்ட சந்தர்ப்பங்களில அண்மைகால அனுபவமாக வெளிப்படுவது இலங்கை கேஸ் கம்பனி விற்பனை யேயாகும்.

கேஸ் கம்பனிவிற்பனையின் போதுஇந்த சர்வதேச வியாபார ஷெல் கம்பனியின் சுரண்டலுக்கு இரையாகியது தொழிலாளர் வாக்கத்தினர் மாத்திரமல்ல முழு நுகர்வோரும் இந்த சுரண்டலுக்கு எண்ணெய் விறகு தட்டுப்பாடு என்பதாலும் மககள் கேஸ் பாவனைக்கு மாறிக கொண்டிருக்கும் இந்நேரத்தில் கேஸ்ஸின் விலையைததீர்மானிக்கும் பொறுப்பையும் ஷெல் கம்பனிக்கு விற்கப்பட்டிருப்பதால் கேஸ் பாவனையாளர்கள் ஷெல் கம்பனியால் கட்டுப்பாட்டுக்குள் உள்ளாக்கப்பட டுள்ளார்கள். இங்குள்ள முக்கியத்துவம் என்னவென்றால் கேஸ் பாவனையாளரான மக்களுக் காக எவ்வழியிலும் முன்நிற்கும் உரிமை அரசாங்கத்தால் விற்கப பட்டிருப்பதேயாகும். தேசிய சொத்துக் களை விற்கும்போது அரசாங்கத்தின் பக்கமிருந்து முன்வைக்கப்படும் அபிவிருத்தியும் திட்டத்தைபற்றிய நிபந்தனை ஓர் போலி ஏமாற்றும் கறபனாவாத சொற்பொழிவென்றே உறுதிப் படுத்துகிறது.

அமெரிக்க கம்பெனியை இலங் கைக்கு வரவழைத்து, இங்கு கைதது பாவாடை விரித்த வெகுசன ஊடகத்தினர் தற்போது மௌனமா யிருக்கின் றனர். உலகிலுள்ள மிகப்பெரிய வியாபாரியின் இலங்கை வரவுபற்றி எதுவித கூச்சமின்றி கருத்துவெளியிட்ட சட்டவல்லுனர் ஜீ. எல். பீரிஸ் இப்போது ஷெல் கம்பெனி ஒப்பந்தத்தின் சட்டரீதியான நிபந்தனையை மீறும்போது மௌனியாவுள்ளார். இப்போதும் கேஸ்ஸிக்கான சகல நிபந்த னைகளும் கம்பனி மீறியுள்ளதோடு, வருடாந்தம் கேஸ்ஸின் விலையை உயர்த்தும் கட்டுபபாட்டையும் அகற்றியுள்ளனர். வருடாந்தம் விலையை உயர்த்தும் எல்லை 10% என அறிவிக் கப்பட்டாலும் கூட இப்போது ஒரு வருடத்திற்குள் 20% த்திற்கு அளவோ அல்லது அதற்கு மேலதிகமாகவோ விலைகள் உயர்த்தப்பட்டுள்ளது. அத்தோடு கேஸ் சிலிண்டர் ஒன்றின் விலை ரூபா 500/- வரை உயர்த்தும் எல்[லை]

5ம் பக்கம் பார்க்[க]